முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்

OS.No.823/2024

Witness-DW2

பெயர் – குப்பன்

த/பெ – ஆறுமுகம்

இன்று (24.02.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சி சொல்ல பிரதிவாதிதான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த முதன்மை சாட்சியத்தில் ஒரு சில விவரங்கள் தான் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு சில விவரம் தான் தெரியும் என்றால் எனக்கு இந்த பாண்டு எழுதிய முழு விவரமும் தெரியாது என்றால் சரிதான். நான் சொல்லும் பாண்டு எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் தேதி மாதம் தெரியாது 2012 ம் ஆண்டு எழுதப்பட்டது. பாண்டு பூர்த்தி செய்யப்பட்டதா அல்லது பூர்த்தி செய்யப்படாததா என்றால் ஒரு பாண்டு பூர்த்தி செய்யப்பட்டது ஒரு பாண்டு பூர்த்தி செய்யப்படாதது. எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்றால் ரூ.50,000/– கொடுக்கப்பட்டது. பைசல் செய்தது எவ்வளவு தொகை என்றால் பைசல் செய்தது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக பாண்டு பைசல் செய்யும் போது முத்திரை வில்லையை கிழித்துவிட்டு தான் கொடுப்பது வழக்கம். ஆனால் நான் சொல்லும் பாண்டு முத்திரைவில்லை கிழிக்கப்படவில்லை என்றால் சரிதான். பைசல் செய்யும் போது முத்திரைவில்லையை கிழிக்காமல் கொடுக்க வாய்ப்பில்லை நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாண்டை யார் வாங்கி வந்தது என்றால் நடராஜ் தான் வாங்கி வந்தார் அவருடைய கடையிலேயே பாண்டு வைத்திருக்கிறார். மொத்தம் 2 பாண்டில் பைசல் செய்த பாண்டை பாலசுப்பிரமணியத்திடம் கொடுத்துவிட்டு மற்றொரு பாண்டை வாதி நடராஜ் வைத்துக்கொண்டார் என்று தான் நான் சொல்கிறேன் என்றால் சரிதான். 2 பாண்டுகளும் ஒரே மாதிரியானவைகள் அல்ல வெவ்வேறான வகையானவை என்றால் சரிதான். நடராஜிடம் 2 வகையான பாண்டுகளும் உள்ளது.

வா.சா.ஆ1 மட்டும் தான பிரதிவாதி எழுதிக்கொடுத்தது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.த.சா.ஆ2 நாங்களே தயாரித்து போட்டது என்றார் சரியல்ல. பி.த.சா.ஆ2ல் 2 சாட்சிகள் உள்ளனர் வா.த.சா.ஆ1ல் ஒரு சாட்சி மட்டும் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்லும் 2 பாண்டுகளும்எ ங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் நடராஜ் கடையில் வைத்து எழுதப்பட்டது. அப்போது என்ன நேரம் இருக்கும் என்றால் மதியம் இருக்கலாம் நேரம் தெரியவில்லை. யார் யார் இருந்தார்கள் என்றால் நடராஜ், பாலசுப்ரமணியம், மற்றும் நான் இருந்தோம். எனக்கும் நடராஜ்க்கும் பேச்சு வார்த்தை உள்ளதா என்றால் அவ்வளவாக பேச்சு வார்த்தை இல்லை. நான் பிரதிவாதி வாதியிடம் வாங்கிய பணத்தை ஏமாற்றுவதற்காக பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வ.த–சா.ஆ1 மட்டும் தான் பிரதிவாதி வாதி பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்தார் பி–த.சா.ஆ2 நாங்களே ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-.A. Tamilselvan, M.L.,

Principal Subordinate Judge ,
Villupuram